DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No. 117/2018**

| | | |
|---|---|---|
| Depositions of Witness for | | Prosecution Pw 8 |
| | | Defence |
| | | Court |
| Name | : | திரு. ஜெயபால் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 31st day of October 2025.

**(Accused absent. Petition filed and allowed. )**

**முதல் விசாரணை**

நான் தற்போது தட்டப்பாறையில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். சுமார 7 – 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் எங்கள் ஊரில் இருந்தபோது அங்கு வந்த போலீசார் கேட்டுக்கொண்டதன்

பேரில் மேற்படி கையொப்பங்களை போட்டுக்கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்ததுஎன்று எனக்கு தெரியாது. **பார்வை மகசரில் உள்ள என்னுடைய முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1** ஆகும். **அத்தாட்சியில் உள்ள என்னுடைய முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, கடந்த 2016ம் வருடம் தெய்வசுந்தரபாண்டியன் மற்றும் வெள்ளத்துரை ஆகியோரை நல்லமலை என்பவர் தாக்கி காயப்படுத்தியது சம்பந்தமாக போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அந்த பார்வை மகசரில் நானும், சாமியாத்தேவர் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், சம்பவ இடத்திலிருந்து ஒரு 380 revolver க்குரிய காலி கேஸ்கள் 3 ஆகியவற்றை ஆய்வாளர் ஒரு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியிலும் நானும், சாமியாத்தேவர் என்பவரும் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும், சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi